# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.

முன்னிலை : **திருமதி. D. ஜான்சிராணி, MBA., LLM.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**

2025–ஆம் ஆண்டு, ஜுலை திங்கள், 21–ஆம் நாள், திங்கட்கிழமை

**I.A. No. 7 of 2024 in O.S. No. 85 of 2006**
**(CNR No. TNSA13-000063-2006)**

பாப்பாத்தி (எ) கலா .. மனுதாரர் / வாதி

எதிராக

1. அருணாச்சலம் (இறந்தவர்)
2. ராஜேந்திரன்
3. மாது (எ) மாதேஸ்வரி
4. ராமலிங்கம்
5. ராஜா .. எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இம்மனுவின் மீதான விசாரணையானது, இன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபொழுது, மனுதாரர் / வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. A. திருநாவுக்கரவு அவர்களும், 1–ம் எதிர்மனுதாரர் / பிரதிவாதி காலமாகிவிட்ட நிலையில், 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. S. செந்தில்முருகன் அவர்களும் ஆஜராகியும், இரு தரப்பு வாதம்

*.. 2 ...*

மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்து இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**<u>உத்தரவுரை</u>**

முல்லைவாடி கிராம நிர்வாக அலுவலரை அழைத்து, வழக்குச்சொத்து சம்மந்தப்பட்ட வருவாய்துறை ஆவணங்களின் சான்றிட்ட நகல்களை தாக்கல் செய்யவும், வழக்குச்சொத்து குறித்து விசாரணை செய்யவும் அனுமதிவேண்டி மனுதாரர் / வாதி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. **<u>மனுதாரர் / வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் :</u>** மனுதாரர் / வாதி, அசல் வழக்கை எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். வாதி தரப்பு விசாரணைக்காக வழக்கு வாய்தா போடப்பட்டுள்ளது. வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் கோட்டை பகுதியில் அமைந்துள்ள வழக்குச்சொத்து தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வு துறையின் கட்டுப்பாட்டில் இருந்தது. அதனால் தாவா சொத்தை பொறுத்து வருவாய்துறை ஆவணங்கள் எதுவும் வாங்கியவர்களுக்கும், குடியிருப்பவர்களுக்கும் கடந்த மூன்று வருடங்களாக வழங்கப்படவில்லை.

தற்பொழுதுதான் வருவாய்துறையினர் கோட்டை பகுதியில் அமைந்துள்ள நிலங்களை நத்தம் நிலங்களாக மாற்றி வழக்குச்சொத்தில் வசிப்பவர்களுக்கும், வழக்குச்சொத்தை வாங்குபவர்களுக்கும் பட்டா வழங்கியுள்ளனர். வழக்குச்சொத்துக்கான பட்டாவை தாக்கல் செய்யவும், வழக்குச்சொத்தின்

**.. 3 ...**

தன்மை மற்றும் வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் வழக்குச்சொத்துக்கான வருவாய்துறை ஆவணங்களை வழங்காததற்கான காரணத்தை விளக்கவும், வழக்குச்சொத்துக்கான வருவாய்துறை ஆவணங்களை தாக்கல் செய்யவும், வழக்குச்சொத்தின் இயற்கை அமைப்பு குறித்து விளக்கவும் முல்லைவாடி கிராம நிர்வாக அலுவலரை அழைத்து விசாரிக்க வேண்டியது அவசியமாக உள்ளது. அவ்வாறு செய்யாவிட்டால் மனுதாரர் / வாதிக்கு பெருத்த கஷ்டநஷ்டம் ஏற்படும். எனவே, முல்லைவாடி கிராம நிர்வாக அலுவலரை அழைத்து சாட்சியாக விசாரிக்க அனுமதிவேண்டி மனுதாரர் / வாதி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

3. <u>2–ம் எதிர்மனுதாரர் / பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு, 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:</u> மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளை எதிர்மனுதாரர்கள் மறுத்துள்ளனர். மேலும், அசல் வழக்கில் வாதியை விசாரணை செய்து வா.சா.ஆ.1 முதல் 8 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. கடந்த 1940–ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட கிரய ஆவணம் வா.சா.ஆ.3–ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி கிரய ஆவணத்தின் சொத்து விவரத்தில், நல்லமுத்து படையாச்சி என்பவருக்கு விற்பனை செய்தவர் எனக்கு கிரயம் மூலமாகவும், பட்டா எண்.551–ன்படியும் ச.எண்.413/15–ல் உள்ள சொத்து பாத்தியப்பட்டது என்று கடந்த 85 ஆண்டுகளுக்கு முன்பே கிரய ஆவணத்தில் எழுதப்பட்டுள்ளது.

இந்நிலையில் மனுதாரர் / வாதி மனுவில், கோட்டைப்பகுதியானது தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை கட்டுப்பாட்டில் இருந்ததாகவும், அதனால் கோட்டைப்பகுதியில் அமைந்துள்ள வழக்குச்சொத்திற்கு நீண்டகாலமாக

.. 4 ...

வருவாய்துறை ஆவணங்கள் ஏதும் ஏற்படவில்லை என்றும், கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பிருந்துதான் வருவாய்துறை ஆவணங்கள் மாற்றம் செய்து கிரயம் பெற்றவர்களுக்கும், குடியிருப்பவர்களுக்கும் பட்டா வழங்கியுள்ளதாகவும் என்றும் உண்மைக்கு புறம்பான சங்கதிகளை குறிப்பிட்டு மனு தாக்கல் செய்துள்ளார்.

வழங்கப்பட்ட பட்டாவில் பட்டா எண்ணோ, சர்வே எண்ணோ எதுவும் குறிப்பிடப்படவில்லை. வழக்குச்சொத்து அமைந்துள்ள சர்வே எண்களில் கடந்த 1940–ம் ஆண்டு முதலே தொடர்ந்து பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் எழுதப்பட்டுள்ளது. மனுதாரர் பட்டா வழங்கியுள்ளதாக கூறியுள்ளதால் முதலில் வாதியின் மூலமாகதான் வழங்கப்பட்ட பட்டாவை நீதிமன்றத்தில் ஒப்படைத்து விசாரணை செய்யப்படவேண்டும்.

பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள கூடுதல் பதிலுரையில், கீழ்மேல் நீளத்தில் கிரயம் பெற்றது தவறு என்றும், அதன்படி வாதிக்கு உரிமையில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. நிலப்பரப்பு சம்மந்தமாக அளவீடு செய்யாமல் கிராம நிர்வாக அலுவலர் சாட்சியமளிக்க இயலாது. மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ளதுபோல் முல்லைவாடி கிராம நிர்வாக அலுவலரை வழக்குச்சொத்திற்குண்டான வருவாய்துறை ஆவணங்களின் சான்றிட்ட நகலை ஒப்படைத்தும் வழக்குச்சொத்திற்குண்டான பட்டா வழங்காதது குறித்தும், இயற்கை அமைப்பு குறித்தும், நிலப்பரப்பு குறித்தும் சாட்சியாக விசாரணை செய்ய தேவையில்லை. எனவே, மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளது.

4. **தற்பொழுது இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,**

*மனுதாரர் / வாதி கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா?*

.. 5 ...

5. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

6. **தீர்வு :**

1) மனுதாரர் / வாதி இம்மனுவை, தாவா தாக்கல் செய்யப்பட்டபொழுது தாவா சொத்தானது தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறையின்கீழ் இருந்ததாகவும், அதனால் வருவாய்துறை ஆவணங்கள் தாவா சொத்துக்கு வழங்கப்படவில்லை எனவும், சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்பு தாவா சொத்தானது வருவாய்துறையின்கீழ் கொண்டுவரப்பட்டதாகவும், அதனால் அங்கு வசிப்பவர்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளதாகவும், எனவே, முல்லைவாடி கிராம நிர்வாக அலுவலர் அவர்களை தனது தரப்பில் சாட்சியாக விசாரணை செய்தால்தான் தாவா சொத்துக்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டபொழுது பட்டா வழங்கப்படாதது குறித்தும், தற்பொழுது பட்டா வழங்கப்பட்டுள்ளது குறித்தும் நிரூபணம் செய்ய முடியுமென மனு தாக்கல் செய்துள்ளார்.

2) மாறாக எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில், வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.3-ஆன கடந்த 1940-ம் ஆண்டு ஆவணத்தின் சொத்து விவரத்தில் நல்லமுத்து படையாச்சி என்பவருக்கு விற்பனை செய்தவர் எனக்கு கிரயம் மூலமாகவும், பட்டா எண்.551-ன்படியும் ச.எண்.413/15-ல் உள்ள சொத்து பாத்தியப்பட்டது என்று கடந்த 85 ஆண்டுகளுக்கு முன்பே கிரய ஆவணத்தில் எழுதப்பட்டுள்ளது என்றும், தாவா சொத்துக்கு வழங்கப்பட்டுள்ள பட்டாவை வாதியின் மூலமாகதான் தாக்கல் செய்ய வேண்டுமெனவும், மேலும் நிலப்பரப்பு சம்மந்தமாக அளவீடு செய்யாமல் கிராம நிர்வாக அலுவலர் சாட்சியமளிக்க இயலாது எனவும், எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமெனவும் எதிருரை தாக்கல் செய்துள்ளனர்.

3) வழக்கையும், மனுவின் தன்மையையும் ஆராய்ந்து பார்க்கையில், இவ்வழக்கை மனுதாரர் / வாதி, எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கில், மனுதாரர் / வாதி தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய அவருக்கு முழுமையான வாய்ப்பளிப்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், மனுதாரர் / வாதி தனது மனுவில் தனது தரப்பில் கோரும் ஆவணங்களை குறிப்பிட்டு கூறாத நிலையில், முல்லைவாடி கிராம நிர்வாக அலுவலரானவர் தாவா சொத்திற்குண்டான தனது வசமுள்ள ஆவணங்களுடன் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியமளிக்க உத்தரவிடப்படுகிறது.

7. இறுதியாக, மனுதாரர் / வாதி தாக்கல் செய்துள்ள இம்மனுவை இந்நீதிமன்றம் அனுமதித்து உத்தரவிடுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவுரையானது என்னால் சுருக்கெழுத்துத்–தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2025–ஆம் ஆண்டு, ஜுலை திங்கள், 21–ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D JANSIRANI

Digitally signed by D JANSIRANI
Date: 2025.07.21 18:29:04 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

| | |
|---|---|
| <u>மனுதாரர் / வாதி தரப்பு சாட்சிகள் :</u> | இல்லை |
| <u>எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் :</u> | இல்லை |

*.. 7 ...*

<u>மனுதாரர் / வாதி தரப்பு சான்றாவணங்கள் :</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :</u> இல்லை

<u>நீதிமன்ற சாட்சிகள்</u> : இல்லை

<u>நீதிமன்ற சான்றாவணங்கள்</u> : இல்லை

D JANSIRANI

Digitally signed by D JANSIRANI
Date: 2025.07.21 18:29:18 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

**மு.மா.உ.நீ., (மு.கூ.பொ.) ஆத்தூர்.**

**இ.ம.வ. எண் 7/2024**

**-----------------**

**அ.வ. எண் 85/2006**

அசல் / வரைவு உத்தரவுரை

நாள் : 21.07.2025